# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C.No. 264/2015**

DEPOSITION OF WITNESS : P.W. 2

Name : வைரம் Father's Name :

Village : Taluk :

Religion: Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2018

முதல் விசாரணை :

நான் தற்போது அம்மாபட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 பால்கண்ணனைத் தெரியாது. ஆஜர் எதிரிகளைத் தெரியும். சம்பவம் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுத் தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு கு.வி.:

கடந்த 28.04.2015ம் தேதி மதியம் 2 மணியளவில் பால்கண்ணன் என்பவர் டிராக்டர் வைத்து உழவு செய்தார் என்றும், அந்த சமயம் எதிரிகள் அனைவரும் அருவாள், கம்புகளுடன் வந்து மேற்படி நிலத்தில் அத்துமீறி நுழைந்து பால்கண்ணனை பார்த்து இந்த நிலத்தில் எங்களுக்கும் உரிமை உண்டு என்று சொல்லி உழவு செய்து கொண்டிருந்த டிராக்டரை உழவு செய்யவிடாமல் தடுத்து நிறுத்திவிட்டார்கள் என்றும், மேற்படி 1, 5வது எதிரி மற்றும் 6வது எதிரி பால்கண்ணனை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், மேலும் நிலத்திற்குள் வந்தால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், இதைப் பார்த்த நான் சத்தம் போட்டேன் என்றும், எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.